# A Study on the Theme of Kurinchi Thani through Kurinjikali Tolkappiyar

**T. Muthulakshmi**

*Arignar Anna Arts and Science College, Villupuram, Tamil Nadu, India*

***Article History***

**Received:** 15.06.2024

**Accepted:** 20.07.2024

**Published:** 30.07.2024

**Corresponding Author**

T. Muthulakshmi

**Email Id:**
muthu1995lakshmi@gmail.com

**Citation:**
Muthulakshmi, T. "A Study on the Theme of Kurinchi Thani through Kurinjikali Tolkappiyar." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. S1, 2024, pp. 1–5.

***Abstract***

*This research is done to find out whether kurinji themes mentioned by tolkappiyar are present in kurinjikali song*

***Keywords: To Fill and for the Sake of Filling Murugan, Vangai flower, Destruction of honey, Water fall water***

***References***

1. *Agapporul villakkam Naar Kaviraasar Nambi raja publication first edition-2010*
2. *Kalithogai- kurinjikali source and method, Elavazhuthi, Dhanalakshmi publication-2016*
3. *Kalithogai source and method, Vishvanathan method, new century book house, 5 th publication- 2014*
4. *Tholkappiyam source and method, puliyurkesikan saratha publication 7 th edition-2016*

# குறிஞ்சிக்கலி தொல்காப்பியர் வழி குறிஞ்சித்திணை கருப்பொருள் ஓர் ஆய்வு

***து. முத்துலட்சுமி***
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி
விழுப்புரம்

***ஆய்வு சுருக்கம்***

*தொல்காப்பியர் கூறிய குறிஞ்சி கருப்பொருள் குறிஞ்சிக்கலி பாடலில் இடம் பெற்றுள்ளதா என்பதை அறிய இவ்வளவு மேற்கொள்ளப்படுகிறது.*

***ஆய்வு நோக்கம்***

*கலித்தொகை பழந்தமிழரின் சிறப்புக்குரிய நூல் ஆகும். அதில் அமைந்த குறிஞ்சிக்கலி பாடல்களை தொல்காப்பியா கூறிய குறிஞ்சித்திணைக்குரிய கருப்பொருளை முன்வைத்து ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.*

***திறவுச்சொற்கள்: புணர்தலும், புணர்தல் நிமித்தமும் முருகன் வேங்கைப் பூஅருவி நீர், தேனழித்தல்***

**முன்னுரை**

*சங்க இலக்கியமாகிய எட்டுத்தொகை நூல்களில் ஒன்று கலித்தொகை . இந்நூல் குறிஞ்சி , முல்லை , மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்து திணை பாடல்களையும் கொண்டுள்ளது. இதில் இடம் பெற்றுள்ள குறிஞ்சிக்கலி பாடலில் கருப்பொருள்கள் எவ்வாறு இடம்பெற்றுள்ளதுஎன்பதை இக்கட்டுரை வாயிலாக ஆராயலாம்.*

**கருப்பொருள்**

***"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை***
***செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ***
***அவ்வகை பிறவும் கருவென மொழிப்"***
***(தொல். பொ.அது. - 20)***

*தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, பறையென்னும் முழக்குக் கருவி, தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, பறையென்னும் முழக்குக் கருவி, தொழில், பண் (இசை) முதலியனவும், அத்தன்மைய பிறவும் கருப்பொருள் என்று கூறுவர்.*

**குறிஞ்சிக்குரிய கருப்பொருள்**

| | | |
|---|---|---|
| *தெய்வம்* | - | *முருகவேள்* |
| *உணவு* | - | *தினையும், ஐவனமும், வெதிர்நெல்லும்* |
| *மா* | - | *யானையும், புலியும், பன்றியும், கரடியும்* |
| *மரம்* | - | *வேங்கையும், கோங்கும்* |
| *புள்* | - | *மயிலும், கிளியும்* |
| *பறை* | - | *வெறியாட்டுப் பறையும், தொண்டகப் பறையும்* |
| *செய்தி* | - | *தேனழித்தல்* |
| *பண்* | - | *குறிஞ்சி* |
| *பூ* | - | *வேங்கைப் பூவும், குறிஞ்சிப் பூவும்* |
| *நீர்* | - | *சுனை நீரும், அருவி நீரும்* |

*தொல்காப்பிய இலக்கணங்களில் காட்டும் குறிஞ்சி கருப்பொருளில் பத்து கருப்பொருளை மட்டுமே தொல்காப்பியர் கூறுகிறார். அதன்பின்னர் தோன்றிய நம்பி அகப்பொருள் இலக்கண நூலில் பதினான்கு கருப்பொருள்கள் கூறப்பட்டுள்ளன. உயர்ந்தோர், அல்லோர், ஊர், யாழ் ஆகிய*

*நான்கு கருப்பொருளும் சேர்ந்து நம்பி அகப்பொருளில் பதினான்கு கருப்பொருள்கள் காணப்படுகின்றன.*

***ஆரணங்கு உயர்ந்தோர் அல்லோர் புள் விலங்கு ஊர் நீந் பூ மரம்.... (ந. அ. அ. நு. 19)***

*என்ற நூற்பா வழி அறிய முடிகிறது.*

**குறிஞ்சிக்கலிப் பாடலில் காணப்படும் குறிஞ்சி கருப்பொருள்கள்**

*குறிஞ்சிக்கலியில் இடம்பெற்றுள்ள பாடல்களில் தொல்காப்பியர் கூறும் பத்து கருப்பொருளையும் பின்வருமாறு ஆராயலாம்.*

**தெய்வம்**

*கருப்பொருளில் முதன்மையானதாக தொல்காப்பியர் குறிப்பிடுவது தெய்வம். குறிஞ்சித்திணை கடவுளான முருகனை பின்வரும் வரிகள் மூலம் அறியலாம்.*

***"வரை உறை தெய்வம் உவப்ப உவந்து"***

***(கு கலி. பா. 3)***

***"கொடிச்சியர் கூப்பி வரைதொழு கை போல்"***

***(கு. கலி. 4)***

***"ஐயனை ஏத்துவாம் போல"***

***(கு. கலி, 2)***

*வரைதெய்வம். உறை தெய்வம். ஐயன் என்பவை முருகனைக் குறிக்கும் சொற்கள் ஆகும்.*

**உணவு**

*திணை, ஐவனம், வெதிர்நெல் போன்றவை குறிஞ்சி உணவுப்பொருள்கள்.*

**திணை**

***"அவனும்தான், ஏனல் இதணத்து அகிற்புகை"***

***(கு. கலி. -3)***

***"தகை கொண்ட ஏனலுள், தாழ்குரல் உரீஇ"***

***(கு. கலி. -4)***

***"களிறு என ஆர்ப்பவர். ஏனல் காவலரே"***

***(கு. கலி. 16)***

*ஏனல் என்பது திணையைக் குறிக்கும் சொல். திணைப்புனத்தில் பரண்மேல் புகை உண்டாக்குதல், வளைந்த திணை நல்ல மகளிர் போல் தலைகவிழ்ந்து இருத்தல், யானை என எண்ணி திணைக் காவலர்கள் கவண் எறிதல் போன்றவை மூலம் குறிஞ்சிக் கலியில் திணை உணவுப் பொருளாக பயன்படுத்தப்பட்டது தெரிய வந்துள்ளது.*

**ஐவனம்**

***"ஐவன வெண்நெல் அறை உரலுள் பெய்து"***

***(கு. கலி. -7)***

*குறிஞ்சித்திணையில் விளையும் மலை நெல்லாகிய ஐவனம் குறிஞ்சிக்கலிப் பாடலில் இடம்பெற்றுள்ளது.*

*வெதிர்நெல்*

***"ஆடுகழை நெல்லை அறை உரலுள் பெய்து"***

***(கு. கலி. - 5)***

***"கொல்யானைக் கோட்டால் வெதிர்நெல் குறுவாம் நாம்"***

***(கு. கலி. - 6)***

***"வாங்குகோல் நெல்லொடு வாங்கி, வருவைக்கல்"***

***(கு.கலி.- 14)***

*வெதிர்நெல் என்பது மூங்கில் நெற்கதிர்கள். மூங்கில் அரிசியும் குறிஞ்சிக்கலிப் பாடலில் இடம்பெற்றுள்ளது.*

*தொல்காப்பியா குறிப்பு குறிஞ்சித் திணைக்குரிய உணவுப்பொருள் அனைத்தும் குறிஞ்சிக்கலிப் பாடலில் இடம்பெற்றுள்ளது.*

**மா**

*மா என்றால் விலங்கு என்று பொருள். குறிஞ்சி நில விலங்குகள் யானை, புலி, பன்றி, கரடி என்று தொல்காப்பியர் கூறுகிறார்.*

**யானை**

***"ஒடுங்கா எழில் வேழம் வீழ்பிடிக்கு" (கு, கலி-4)***

***"முறம் செவி வாரணம் முன்குளகு அருந்தி"***

***(கு, கலி-6)***

***"பூம்பொறி யானை புகாமுகம் குறுகியும்"***

***(கு, கலி-10)***

*வேழம் வாரணம் என்பவை யானையைக் குறிக்கும் சொற்கள்.*

**புலி**

***"கடுங்கண் உழுவை அடிபோல வாழைக்"***

***(கு. கலி- 7)***

*"வேங்கை அம்சினை எனவிற்றபலி முற்றியும்"*

*(கு. கலி. 10)*

*உழுவை என்ற சொல் புலியைக் குறிக்கிறது.*

*தொல்காப்பியா குறிப்பிட்ட குறிஞ்சிநில விலங்குகள் நான்கு. அவற்றில் புலியும், யானையும் மட்டும் இடம்பெற்றுள்ளன. கரடியும், பன்றியும் இடம்பெறவில்லை என்பது அறியத்தக்கது.*

**புள்**

*புள் என்றால் பறவை. குறிஞ்சி நிலப் பறவைகள் மயிலும், கிளியும் ஆகும்.*

**கிளி**

***"படிகிளி பாயும் பசுங் குரல் ஏனல்"***

***(கு. கலி- 14)***

*திணைப்புனத்தில் படிகின்ற கிளிகள் பரவிக் கிடக்கும் பசிய கதிர்களை உண்ணுகின்றன.*

**மயில்**

***"மாவென்ற மடநோக்கின் மயில் இயல் தளர்பு ஒல்கி"***

***(கு. கலி -21)***

*மயில் போன்ற சாயலை தலைவி கொண்டுள்ளாள். குறிஞ்சி நிலத்திற்குரிய பறவைகள் இரண்டுமே குறிஞ்சிக்கலிப் பாடலில் இடம்பெற்றுள்ளது.*

**மரம்**

*குறிஞ்சிநிலத்திற்கு கோங்கும். வேங்கையும் மரங்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன.*

**வேங்கை**

***"தகை இணர் இள வேங்கை மலர் அன்ன சுனங்கினாய்"***

***(கு. கலி. 21)***

***"வேங்கை விரிவு இடம் நோக்கிசு***

***(கு. கலி. 2)***

***"புனவேங்கைத் தாது உறைக்கும் பொன்அறை முன்றில்"***

***(கு. கலி. 3)***

*மேலே கொடுக்கப்பட்ட செய்யுள் வரிகள் வேங்கை மரம் இருப்பதைக் குறிக்கிறது.*

**கோங்கு**

***"தண்நறுங் கோங்கம் மலர்ந்த வரையெல்லாம்"***

***(கு. கலி. 6)***

***"முதிர்கோங்கின் முகை என்"*** ***(கு. கலி. 20)***

*கோங்கு நன்கு வளர்ந்து மலாந்து பக்கத்து மலை வரையில் பரவிக் கிடக்கிறது. கோங்கு வேங்கை ஆகிய இரண்டு மரங்களுமே குறிஞ்சிக்கலிப் பாடலில் காணப்படுகிறது.*

**பறை**

*வெறியாட்டுப்பறை, தொண்டகபறை குறிஞ்சிக்கலிக்குரிய பறைகள் ஆகும்.*

*வெறியாட்டுப்பறை*

***"மறையினின் மணந்து, ஆங்கே மருவு அறத்துறந்த பின்,***
***இறைவளை நெகிழ்பு ஓட, ஏற்பவும் ஒல்லும்மன்-***
***அயல் அலா தூற்றலின், ஆய் நலன் கிழந்த கண்***
***கயல் உமிழ் நீர் போல கன்பனி கலுழாக் கால்?"***

***(கு கலி. 17)***

*தலைவன் ஒருமுறை தன் ஊருக்குச் சென்று வருகிறேன் என தலைவியிடம் கூறிவிட்டுச் செல்வான், தலைவன் திரும்பி வர காலம் நீட்டிப்பதால் தலைவி உடல் மெலிந்து, பொலிவு இழந்து விடுகிறாள். தலைவியின் களவு ஒழுக்கம் அறியாத செவிலியும், நற்றாயும் இது இறைவனால் உண்டான நடுக்கம் என எண்ணி முருகனுக்கு வெறியாட்டுப்பறை செய்வதாக குறிஞ்சிக்கலிப் பாடல் கூறுகிறது.*

**தொண்டகப்பறை**

***"தெரியிழாய் நீயும் நின்கேளும் புணர,***
***வரை உறை தெய்வம் உவந்து***
***குரவை தழீஇ யாம் ஆட குரவையுள்***
***கொண்டு நிலை பாடிக்காண்"*** ***(குகலி - 3)***

*தோழி அறத்தோடு நிற்கும்போது செவிலி நற்றாய்க்கும் நற்றாய் தன்னையர் முதலானோர்க்கு அறத்தோடு நின்று இறுதியில் தனயா திருமணத்திற்கு உடன்பட்டதை தோழி தலைவியிடம் கூறுகிறாள். விரைவில் திருமணம் முடியும்பொருட்டு தெய்வத்தைப் பரவி குரவை ஆடினர். இக்குரவை ஆடும்போது ஒலிக்கும் பறை தொண்டகப் பறை ஆகும்.*

*இரண்டு பறைகளும் குறிஞ்சிக்கலியில் இடம்பெற்றுள்ளன எனத் தெரியவந்துள்ளது.*

**பண்**

*பண் என்பது இசையைக் குறிக்கிறது. குறிஞ்சி நிலத்திற்கு உரிய பண் குறிஞ்சி பண். பண் பற்றிய செய்திகள் குறிஞ்சிக்கலிப் பாடலில் கிடைக்கப்பெறவில்லை.*

**பூ**

*வேங்கைப்பூவும், குறிஞ்சிப்பூவும் குறிஞ்சித் திணைக்குரிய பூக்கள் ஆகும். குறிஞ்சிப்பூ குறிஞ்சிக்கலிச் செய்யுளில் இடம்பெறவில்லை. வேங்கைப் பூ மட்டும் இடம்பெற்றுள்ளது என்பதை*

***"தகை இணர் கிள வேங்கை மலர்"***

***(கு.கலி.பா. 21)***

***"விடர் வரை எரி வேங்கை" (கு.கலி.பா. 9)***

*இச்செய்யுளின் மூலம் உணரலாம்.*

**நீர்**

*சுணைநீரும், அருவி நீரும் குறிஞ்சித் திணைக்குரிய நீர் ஆகும். சுணைநீர் குறிஞ்சிக்கலி பாடல் இடம்பெற்றுள்ளதை*

***"விடியல் வெங்கதிர் காயும் வேய் அமல் அகல் அறை,***
***கடிசுனை கவனிய காந்தள்" (கு.கலி.-9)***

*இவ்வரிகள் எடுத்துரைக்கின்றன.*

**அருவி**

***"தன் தாழ் அருவி, அரமகளிர் ஆடுபவே"***

***(கு. கலி. 4)***

***"முறம் செவி வாரணம் முன்குளகு அருந்தி,***
***கறங்கு வெள் அருவி ஒலின் துஞ்சும்" (கு. கலி. (6)***

*தாழ் அருவியில் தெய்வ மகளிர் நீராடுதல், முறம் போல் செவி கொண்ட யானை அருவி நீரை உண்டு செல்லும் என்பவை அருவி இருப்பதை அறிய முடிகிறது.*

**செய்தி**

*செய்தி என்றால் தொழில் என்று பொருள். குறிஞ்சித்திணையில் செய்யப்படும் தொழில் தேனழித்தல் ஆகும். அதனை,*

***"வரைமிசை மேல் தொடுத்த நெய்க்கண் இறாஅல்"***

***(கு. கலி. 4)***

***"மழைநுழை திங்கள் போல் தோன்றும்"***

***(கு. கலி. 3)***

***"வள்ளிகீழ் விழா: வரைமிசைத் தேன் தொடா"***

*இவ்வரிகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.*

**முடிவுரை**

*இவ்வாய்வின் மூலம் குறிஞ்சிக்கலியில் பெரும்பாலான கருப்பொருள்கள் இருப்பதை அறிய முடிகிறது. குறிஞ்சிப்பன், குறிஞ்சிப்பூ, கரடி, பன்றி போன்றவைகள் மட்டும் இடம் பெறவில்லை. அதற்கு மாறாக, மான், குரங்கு, பாம்பு, தும்பி. மூங்கில், நரந்தம்பூ. மகரமீன், தாமரை போன்றவைகள் இடம் பெற்றுள்ளதை குறிஞ்சிக்கலி இலக்கியத்தின் வாயிலாம் நாம் அறியமுடிகிறது.*

**துணை நூல் பட்டியல்**


1. அகப்பொருள் விளக்கம், நாற்கவிராச நம்பி , ராஜா ப்ப்ளிக்கேஷன் , முதற்பதிப்பு - 2010
2. கலித்தொகை - குறிஞ்சிக்கலி மூலம் உரையும், வீ.இளவழுதி தனலட்சுமி பதிப்பகம், பதிப்பு - 2016
3. கலித்தொகை மூலமும், உரையும் , விஸ்வநாதன் உரை , நியு சென்சுரி புக் அவுஸ் , ஐந்தாவது பதிப்பு - 2014
4. தொல்காப்பியம் மூலமும், உரையும், புலியூர்கேசிகண் சாரதா பதிப்பகம் 7-வதுபதிப்பு - 2016